722

இயற்கை விளக்க வாசகம்

இரண்டாம் புஸ்தகம்

(தற்கால முறைக்கிணங்கத் திருத்தப்பெற்றது)

திவான் பஹதூர்

வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்

[சென்னை சர்வகலாசாலை அங்கத்தினர்; திராவிட கலாசபை அக்கிராசனாதிபதி; லண்டன் வித்யா சங்கம் முதலியவற்றின் அங்கத்தினர்; பல நூல்களின் ஆசிரியர்; 'ஜன விநோதினி' 'மஹாராணி' பத்திராசிரியர்]

எழுதியது

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்
[illegible], பம்பாய், கல்கத்தா, லண்டன்.

TB
A(5)
N34
84625

திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

இயற்கை விளக்க வாசகங்கள்

சிறுவயதிலேயே 'ஸைன்ஸ்' என்னும் இயற்கை ஞானத்தைப் பிள்ளைகளுக்குச் சிறிது சிறிதாகப் புகட்டவேண்டுமென்பது இப்பொழுது உயர்ந்த கல்வியதிகாரிகள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேல்நாட்டுப் பள்ளிக்கூடங்களில், பாலர் வகுப்பு முதற்கொண்டே இயற்கைஞானம் கற்பிக்கப்படுவது அவசியமாய் விட்டது. நம் நாட்டிலும் பிள்ளைகள் அறிவில் சிறந்து வளர்ந்து தம் நாட்டுக்கும் தங்களுக்கும் உபகாரிகளாவதென்றால், நம் பள்ளிக்கூடங்களிலும் இயற்கைஞானம் போதிப்பது அவசியமாதல் வேண்டும். பல வருஷங்களுக்கு முன்னேயே இவ்வுண்மையை அறிந்து, காலஞ்சென்ற திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் இயற்கைவிளக்க வாசகங்கள் என்ற தொகுதியில் பல பாடபுஸ்தகங்கள் எழுதி வெளியிட்டார்கள். அவை கல்வியதிகாரிகளாலும் உபாத்திமார்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. ஆனால் அவை எழுதப்பட்ட காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையே, இயற்கை ஞானமும் போதனா முறையும் மிக விருத்தியடைந்துள்ளபடியால், அவ்விருத்தியை அனுசரித்து அவை யாவும் திருத்தி மாற்றி விரித்துப் புதுமுறையில் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு:

				ரூ.	அ.	பை
முதற் புஸ்தகம்	...	...	...	0	2	0
இரண்டாம் ,,	...	...	...	0	3	0
மூன்றாம் ,,	...	...	...	0	4	0
நான்காம் ,,	...	...	...	0	5	0
ஐந்தாம் ,,	...	...	...	0	6	0

திவான் பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்,

ஐ. எஸ். ஓ., ஓ. பி. ஈ., எப். ஆர். எச். எஸ். (லண்டன்),

எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்), தொகுத்த

தமிழ் இலக்கியத் திரட்டு

ஒரு நாட்டாரின் நாகரிக விருத்தியை அளவிட்டறியச் சாதனமாயிருப்பது அந்நாட்டாரின் இலக்கியமே. நம் தமிழ்நாட்டு முற்கால இலக்கியம், பிறநாட்டு முற்கால இலக்கியங்களுக்குப் பின்வாங்காத பெருமையும் அருமையும் உடையதாயிருக்கிறது. ஆயினும், அது தற்கால மாணவர்க்குப் பயன்படா வகையில் பரந்துகிடக்கிறது. அதனை மாணவர்க்குப் பயன்படும் வகையில் சிறுசிறு பகுதிகளாகத் திரட்டிக்கொடுப்பதே இத்தொகுதியின் நோக்கம். இதில் இதுகாறும் இரண்டுபகுதிகள் வெளிவந்துள்ளன.

பகுதி I. (14 வசனபாடங்கள், 12 செய்யுட்பாடங்கள்.)	0	12	0
பகுதி II. (15 வசனபாடங்கள், 8 செய்யுட்பாடங்கள்.)	0	8	0



ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார் தர்பார்.

இயற்கை விளக்க வாசகம்

இரண்டாம் புஸ்தகம்

(தற்கால முறைக்கிணங்கத் திருத்தப்பெற்றது)

திவான் பஹதூர்

வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்

[சென்னை சர்வகலாசாலை அங்கத்தினர்; திராவிட கலாசபை அக்கிராசனுதிபதி; லண்டன் வித்யா சங்கம் முதலியவற்றின் அங்கத்தினர்; பல நூல்களின் ஆசிரியர்; 'ஜன விநோதினி' 'மஹாராணி' பத்திராசிரியர்]

எழுதியது

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்

மதருஸ், பம்பாய், கல்கத்தா, லண்டன்.

1934

ரிஜிஸ்தர் செய்தது]

[விலை 3 அணு.

COPYRIGHT
First Edition printed in 1919
Reprinted 1923, 1924, 1925, 1926, 1927, 1928, 1929, 1934.

PREFACE

THIS series of Nature Readers is intended to fill up a gap in Elementary School books and reading matter for the instruction of children in Primary Schools and Indian Homes. It is well known that no attempt has been made to fill up the gap for nearly half a century of educational effort to bring out special books on Nature Study and Animal Life calculated to arouse and cultivate an interest in the world about us. But now that the Educational Code permits the use of a variety of Readers and class books in our Primary Schools, this gives ample opportunity for the introduction of special Readers to interest children in the study of Nature and instruct them in their duties to the dumb creatures around them.

Much has been done to teach young people the elements of history, geography and arithmetic and even science. Why should not a similar effort be made to instruct them as to their duties to the dumb companions of man and promote the cause of Humane Education in schools and the culture of the power of observation and Nature Knowledge in the elementary stages of thought and learning, through the early reading books? This plan will help to instil in the minds of children the lessons of kindness to all creatures, and give a reality to the teaching by calling attention to the animals and other living objects around man and emphasizing the duty of mercy to them in and out of the School-room and the Home and thus enlarging their sympathies.

A maxim says—'Whatever you would put into the life of a nation put into its schools.' But in India except in a few superior schools, the experience of Educational Inspectors and other competent judges is that the ordinary run of Elementary School-teachers cannot supply what the text-book fails to give. The book is everything. Especially the Vernacular School Primers now in use are often conspicuously the combination of words into vague meaningless sentences; but

early Reading Lessons must have a distinctly moral bearing and therefore mean something which lingering in children's memory for years after leaving school would have some influence on their character. In the existing Vernacular Readers for General Education, the subjects of Humane Education and Nature Study receive little attention; and if even the English Series of Readers have a few lessons on kindness and consideration to dumb animals, they lose much of their force from not using Indian illustrations and scenes of Indian life. As to home-training among the poor, such parents are very rare as can provide the means of teaching their children, and form sentiments and habits or inculcate lessons on the duties their little folks owe to the great Creator and all living creatures, and further assist them to form right ideas of life and conduct.

The Author trusts that this series will be found useful for elementary lessons in Reading as well as for impressing on the children the ideas referred to above. For this purpose he has placed at the beginning the Letters of the Tamil Alphabet and list of words—chiefly familiar names of Objects of the Animal and Vegetable Kingdoms which are meant to serve as exercises in short and long vowel sounds, and in the pronunciation of vowel consonants as a basis for word-building. In the reading lessons which follow, an endeavour has been made to grade the language and subject-matter in accordance with the growing powers of the child.

These Elementary Readers have the approval and sympathy of the President of the Madras S. P. C. A., and will receive, it is hoped, the approbation of the Educational Authorities who wish to see all School Pupils learn, unconsciously in their daily lessons, the Elements of Ethics as applied concretely to many matters of conduct, both at School and in afterlife, in addition to the main purpose of developing the power to read intelligently and well.

V. K.

இரண்டாம் புஸ்தகம்

உள்ளுறை.

		பக்கம்.
முதல் பாகம்	1. சிறு வாக்கியங்கள்	1
	2. படம் சேர்த்துப் படித்தல்	5
	3. காலம்	6
	4. தொழிலாளிகள்	8
	5. இல்லாதவர்கள்	9
	6. உள்ளவர்கள்	9
	7. பசு	10
	8. தாமரை	11
	9. மாமரம்	12
	10. பாத்திரக்கடை	13
இரண்டாம் பாகம்	1. கிளி	15
	2. நாய்	16
	3. தேனீ	17
	4. ஆடு	18
	5. அணில்	19
	6. பூனை	20
	7. கோழி	22
	8. மான்	23
	9. குதிரை	24
	10. யானை	25
	11. மயில்	26
	12. புறா	27
	13. வாத்து	28
	14. ஆந்தை	29
	15. பருந்து	30
	16. குள்ளநரியும் திராக்ஷைக்குலையும் (பாட்டு)	31
	17. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்	33
	18. ஆலமரம்	35
	19. இரண்டு ஆடுகள்	36
	20. சூரிய உதயம்	38
	21. சந்திரனும் நக்ஷத்திரங்களும்	39
	22. சிங்கமும் சுண்டெலியும்	41
	23. நாயும் நிழலும் (பாட்டு)	43
	24. பூஞ்செடி	44
	25. தென்னை	45
	26. தவளை	47
	27. வண்டிகள்	49
	28. வாழை	51
	29. பறக்கும் பூச்சிகள்	53
	30. செய்யுள் பாடம்	54

முதல் பாகம்.

1. சிறு வாக்கியங்கள்.

(பக்ஷிகளின் தொனி)



1. மயில்.

மயில் அழகான பக்ஷி.

அது சிறகை விரித்து ஆடும்.

சிறகு அழகாய் இருக்கும்.

சிறகினுல் விசிறி கட்டலாம்.

மயில் அகவும்.

2. கிளி.

படத்தில் காண்பது கிளி.

கிளியின் நிறம் பல வகை.

சாதாரண கிளியின் நிறம் பச்சை.

கிளி பூனைக்குப் பயப்படும்.

கற்றுக் கொடுத்தால் பேசும்.



3. காகம்.

காகம் கறுப்பாய் இருக்கும்.

காலையில் எழுந்துவிடும்.

எங்கும் பறந்து போகும்.

எந்த இரையையும் தின்னும்.

'காகா' என்று கரையும்.


4. கோழி.

கோழி வீட்டில் வளரும் பக்ஷி.
ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர்.
பெண் கோழிக்குப் பேடு என்று பெயர்.
சேவலுக்குக் கொண்டை பெரிதாயிருக்கும்.

சேவல் கூவும்.

5. ஆந்தை.

ஆந்தை அவலட்சணமான ஒரு பறவை.
மரங்களில் வசிக்கும்.
பூச்சி புழுக்களைத் தின்னும்.
ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது.

ஆந்தை அலறும்.

6. வண்டு.

இது ஒரு சிறு வண்டு.
வண்டுகளில் பலவகை உண்டு.
வண்டு செடிகள் நடுவே பறக்கும்.
பூவில் உள்ள தேனை உண்ணும்.

வண்டு ரீங்காரம் செய்யும்.

(மிருகங்களின் தொனி)



7. குதிரை.

இது ஒரு குதிரை.
குதிரைவேகமாய் ஓடும்.
வண்டி இழுக்கும்.
சவாரி செய்யவும் உத-
வும்.
குதிரை கனைக்கும்.

8. நாய்.

நாய் நன்றியுள்ள ஒரு
செந்து.
நாய்களில் பல சாதி
உண்டு.
நாய் காவல் காக்கும்.
நாய்க்கு ஞாபகம் அதி
கம்.
நாய் குரைக்கும்.

9. பூனை.

பூனை வீடுகளில் வள-
ரும்.
பூனைக்கு இரவில் கண்
தெரியும்.
எலி பூனைக்குப் பயப்-
படும்.
பூனை எலியைப் பிடித்-
துத் தின்னும்.
பூனை சீறும்.



10. பசு.

இது ஒரு பசு.
பசு பால் கொடுக்கும்.
பால் வெள்ளை நிற-
மானது.
பால் ருசியாயிருக்கும்.
கன்றைக் காணுவிட்-
டால் பசு கதறும்.

11. ஆடு.

ஆடு ஒரு சாதுவான
மிருகம்.
ஆடுகளில் பலவகை
உண்டு.
வெள்ளாடும் செம்மறி-
யாடும் சாதாரணமா-
னவை.
ஆடு தழைகளைத் தின்-
னும்.
'மேமே' என்று கத்தும்.

12. நரி.

படத்தில் காண்பது
ஒரு நரி.
நரி மிகவும் தந்திரம்
உள்ளது.
அது காட்டில் இருக்
கும்.
சில சமயங்களில் ஊரு-
க்குள் வரும்.
நரி ஊளையிடும்.

2. படம் சேர்த்துப் படித்தல்.

1. எனக்குப்  பிடித்து எழுதத்தெரியும்.

2. அவன் ஒரு  யை உருட்டினான்.

3. க்குச் சத்துரு

4. காலையில்  கூவும்.

5. பாம்பைக் கொல்லும்.

6. எனக்கு ஒரு  இருக்கிறது.

7. உனக்கு  போடத் தெரியுமா ?

8. என் காலுக்குச் இல்லை.



3. காலம்

சூரியன் தெரிகிற காலம் பகல்.

சூரியன் அஸ்தமித்து தெரியாத காலம் இரவு.

சாதாரணமாய் ஒரு பகலுக்குப் பன்னிரண்டு [மணிநேரம்.

ஒரு இரவுக்குப் பன்னிரண்டு மணிநேரம்.

ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள்.

ஏழுநாள் கொண்டது ஒரு வாரம்.

1. ஞாயிறு.
2. திங்கள்.
3. செவ்வாய்.
4. புதன்.
5. வியாழன்.
6. வெள்ளி.
7. சனி.

——என்று

அந்த ஏழு நாள்களுக்கும் பெயர்.

நாலு வாரங்கள் கொண்டது ஒரு மாதம்.

பன்னிரண்டு மாதம் கொண்டது ஒரு வருஷம்

1. சித்திரை.	7. ஐப்பசி.
2. வைகாசி.	8. கார்த்திகை.
3. ஆனி.	9. மார்கழி.
4. ஆடி.	10. தை.
5. ஆவணி.	11. மாசி.
6. புரட்டாசி.	12. பங்குனி.

இவை தமிழ் மாதங்கள்.

1. ஜனுவரி.	7. ஜூலை.
2. பெப்ரவரி.	8. ஆகஸ்டு.
3. மார்ச்சு.	9. ஸெப்டெம்பர்.
4. எப்ரில்.	10. அக்டோபர்.
5. மே.	11. நவம்பர்.
6. ஜூன்.	12. டிஸெம்பர்.

இவை இங்கிலீஷ் மாதங்கள்.

தமிழ் வருஷத்துக்கு முதல் மாதம் சித்திரை; கடைசி மாதம் பங்குனி.

இங்கிலீஷ் வருஷத்துக்கு முதல் மாதம் ஜனுவரி; கடைசி மாதம் டிஸெம்பர்.

4. தொழிலாளிகள்.

1. நகை செய்கிறவன் தட்டான்.
2. மண்பாத்திரம் செய்கிறவன் குயவன்.
3. மரவேலை செய்கிறவன் தச்சன்.
4. இரும்புவேலை செய்கிறவன் கருமான்.
5. பித்தளைவேலை செய்கிறவன் கன்னான்.
6. துணி நெய்கிறவன் சேணியன்.
7. துணி தைக்கிறவன் தையற்காரன்.
8. துணி வெளுக்கிறவன் வண்ணான்.
9. க்ஷவரம் செய்கிறவன் அம்பட்டன்.
10. கள் இறக்குகிறவன் சாணான்.
11. செருப்பு தைக்கிறவன் சக்கிலியன்.
12. வீடு கட்டுகிறவன் கொல்லத்துக்காரன்.

5. இல்லாதவர்கள்.

கண் தெரியாதவன்	குருடன்.
காது கேளாதவன்	செவிடன்.
வாய் பேசாதவன்	ஊமை.
கால் இல்லாதவன்	முடவன்.
புத்தி இல்லாதவன்.	மூடன்.
வேலை செய்யாதவன்	சோம்பேறி.
தருமம் செய்யாதவன்	லோபி.
பணம் இல்லாதவன்	ஏழை.
கோபம் இல்லாதவன்	சாது.

6. உள்ளவர்கள்.

பணம் உள்ளவன்	பணக்காரன்.
குற்றம் உள்ளவன்	குற்றவாளி.
புத்தி உள்ளவன்	புத்திசாலி.
படிப்பு உள்ளவன்	வித்துவான்.
நோய் உள்ளவன்	நோயாளி.
கோபம் உள்ளவன்	மூர்க்கன் அல்லது கோபி.
இரக்கம் உள்ளவர்	கடவுள்.



7. பசு.

(ஒருமை பன்மை)

இது ஒரு பசு.
என் வீட்டில் ஒரு பசு இருக்கிறது.
அவன் வீட்டில் இரண்டு பசுக்கள் இருக்கின்றன.
இடையன் வீட்டில் பல பசுக்கள் இருக்கின்றன.
அதோ ஒரு பசு வருகிறது.
அதற்குப் பின்னால் சில ஆடுகள் வருகின்றன.
சாயந்திரத்தில் பசுமந்தை வருகிறது.
பசுவுக்குக் கொம்புகள் இருக்கின்றன.
கால்களில் குளம்புகள் உண்டு.
குளம்புகள் பிளவுபட்டிருக்கும்.
கொம்புள்ள மிருகங்களுக்கு குளம்புகள் பிளவுபட்டிருக்கும்.



8. தாமரை.

(வர்ணபேதங்கள்)

தாமரைப் பூ அழகாயிருக்கும். அது குளத்தில் வளரும். தாமரையில் இரண்டுவகை உண்டு. ஒன்று செந்தாமரை. மற்றொன்று வெண்டாமரை. செந்தாமரை சிவப்பா யிருக்கும். வெண்டாமரை வெள்ளையாய் இருக்கும்.

தாமரைப்பூவின் நடுவே சிமிழ்போல ஒன்று உண்டு. அதற்குப் பொகுட்டு என்று பெயர். அது மஞ்சள் நிறமாய் இருக்கும். அதற்குள் சிறுவிதைகள் இருக்கும். அவை முதலில் வெள்ளையாய் இருக்கும்; முற்ற முற்றப் பச்சையாகும்; நன்றாய் முற்றிக் காய்ந்தபிறகு கறுப்பாய்விடும்.

தாமரை இலை வட்டமாய்ப் பெரிதாயிருக்கும். அதன் மேற்புறம் பச்சையாயும் அடிப்புறம் சாம்பல் பூத்தாற்போலவும் இருக்கும். அதில் சாதம் படைத்துச் சாப்பிடலாம்.

குளத்தில் வேறு பூக்களும் பூப்பதுண்டு. அவற்றுள் ஒன்று நீலோற்பலம். அது நீலமாய் இருக்கும்.



9. மாமரம்.

(ருசி)

அந்தத் தோட்டத்தில் ஒரு மாமரம் இருக்கிறது. அது நிரம்பக் காய்க்கும். காய் புளிக்கும்.

காயைப் பறிக்காமல் இருந்தால் தானுய் முற்றிப் பழுக்கும். அப்படிப் பழுத்த பழம் தித்திக்கும்.

சில காய்கள் பிஞ்சிலேயே பழுத்துவிடும். அவைகளை வெம்பல் என்று சொல்வார்கள். அவை தின்ன உதவா. மாம்பழத்திற்குள் கொட்டை இருக்கும். அதுதான் மாமரத்துக்கு விதை. அதை உடைத்தால் உள்ளே வெண்மையான பருப்பு இருக்கும். அதைத் தின்ருல் துவர்க்கும்.

மாம்பிஞ்சையும் மாங்காயையும் ஊறுகாய் போடுவார்கள். ஊறுகாயில் உப்பு அதிகமாய் விட்டால் கறிக்கும்; மிளகாய் அதிகமாய்விட்டால் உறைக்கும். ஊறுகாய் வாய்க் கசப்பை மாற்றும். ஊறுகாயைப் பித்தளை அல்லது செப்புப் பாத்திரங்களில் வைக்கக்கூடாது; வைத்தால் கைத்துப் போய்விடும்.

10. பாத்திரக்கடை.

(உலோக குணங்கள்)

அடுத்த பக்கத்தில் உள்ள படத்தைப்பார். அது ஒரு பாத்திரக்கடை. அங்கே பாத்திரங்கள் விற்பார்கள். பலவகை உலோகங்களினுல் பாத்திரங்கள் செய்வார்கள்.



ஏழைகள் வீட்டில் மண்பாத்திரங்கள்தான் இருக்கும். மண்பாத்திரம் கீழேவிழுந்தால் உடைந்துபோகும். உலோகங்களினுல் செய்த பாத்திரமானுல் அவ்வளவு சீக்கிரம் உடையாது.

இரும்புப்பாத்திரங்கள் உறுதியாய் இருக்கும். ஆனுல் துருப்பிடிக்கும். செம்பு, பித்தளே, வெண்கலம் இவற்ருல் செய்த பாத்திரங்கள் அழகாய் இருக்கும். ஆனுல் களிம்பேறும். ஈயப்பாத்திரமானுல் களிம்பேருது. ஆனுல் அது சூடுபட்டால் சீக்கிரத்தில் உருகிவிடும். வெள்ளிப் பாத்திரங்களில் களிம்பும் ஏருது; அவை சீக்கிரமாய் உருகவும் மாட்டா. ஆனுல் வெள்ளியின் விலே அதிகம். பொன் மிகவும் விலேயுயர்ந்தது. சாதாரணமாய்ப் பொன்னுல் பாத்திரங்கள் செய்வதில்லே; ஆபரணங்கள்தான் செய்வார்கள்.

இரண்டாம் பாகம்.



1. கிளி.

இது கிளியின் படம். கிளி ஒரு அழகான பக்ஷி. கிளியைக் கூட்டில் வைத்து வளர்ப்பார்கள். வளர்க்காத கிளிகள் மரங்களில் கூட்டமாய் வசிக்கும்.

கிளியின் உடல் பச்சை நிறமா யிருக்கும். அதன் மூக்கு கூராயும் சிவப்பாயும் இருக்கும். அதன் கால்கள் குச்சிபோல மெல்லியதாய் இருக்கும். நகங்கள் கூர்மையாய் இருக்கும்.

கிளி அதிக உயரம் பறக்காது. கிளிக்குப் பழங்கள் தின்னப் பிரியம் அதிகம். பேசக் கற்றுக்கொடுத்தால் அது பேசும். அதற்குப் பாடத்தெரியாது. பூனை கிளியைக் கண்டால் பிடித்துக் கொன்றுவிடும்.



2. நாய்.

நான் ஒரு நாய் வளர்க்கிறேன். என் நாயை நீ பார்த்திருக்கிறாயா? என்னுடைய நாய் மிகவும் நல்ல நாய். அது என்னோடுகூடவே இருக்கும்.

நாய் நல்ல அறிவுள்ள ஒரு மிருகம். அது நமக்குத் துணையாயிருக்கும். நம்முடைய வீட்டைக் காக்கும். பழக்கமில்லாதவர்களை வீட்டுக்குள் வரவிடாது.

நாய்க்கு விளையாட்டு கற்றுக்கொடுத்தால் அது நன்றாய் விளையாடும். அது வளர்க்கிறவர்களிடத்தில் பிரியமாயிருக்கும். நாயைச் சில பிள்ளைகள் கல்லால் அடிக்கிறார்கள். அப்படிச் செய்யக்கூடாது. செய்தால் நாய் சும்மா இராது, குரைத்துக் கடிக்கும்.

3. தேனீ.

தேன் சேர்க்கிற ஈக்குத் "தேனீ" என்று பெயர். நீ தேன் சாப்பிட்டிருக்கிருயா? அது இனிப்பாய் இருக்கும். தேனீ பூக்களில் உள்ள தேனை எடுத்துக்கொண்டுபோய்க் கூட்டில் சேர்த்துவைக்கும். அந்தக் கூட்டிலிருந்துதான் மனிதர்கள் தேன் எடுப்பார்கள்.

நீ தேன்கூடு பார்த்திருக்கிருயா? படத்தில் இருப்பது ஒரு தேன்கூடு. அதன்மேலே தேனீக்கள் மொய்த்திருக்கின்றன, பார்.

தேனீ மிகவும் சுருசுருப்புள்ளது. தேனீக்கள் அழகாகக் கூடுகட்டும். தேனீ இல்லாவிட்டால் நமக்குத் தேன் அகப்படாது. தேன் மிகவும் உபயோகமான வஸ்து. அது மருந்துக்கு உதவும்.



4. ஆடு.

ஆடுகளில் பலவகை உண்டு. மாட்டைப்-போலவே ஆட்டுக்கும் கொம்புகள் உண்டு. குளம்புகள் பிளவுபட்டிருக்கும்.

ஆடு தழைகளைத் தின்னும். ஆடு ஒரு உப-யோகமுள்ள பிராணி. ஆட்டுமயிர் கம்பளம் நெய்ய உதவும். வெள்ளாட்டுப்பால் நோயா-ளிக்கு நல்லது.

ஆட்டுக்குட்டிகள் குழந்தைகள்போல் விளை-யாடும். சிறு குழந்தைகளும் ஆட்டுக்குட்டிக-ளோடு விளையாடலாம்.

இடையன் ஆடுகளை இலை தழைகள் உள்ள இடத்திற்குக் கொண்டுபோய் மேய்ப்பான். பொ-ழுது போனால் இடையன் ஆடுகளை மந்தை யாகக்கூட்டி வீட்டுக்குக் கொண்டுவருவான்.

5. அணில்.

அணில் ஒரு அழகான நாலுகால் செந்து. அது உயர்ந்த மரத்திலே பறவைபோல் கூடு கட்டும். அது ஒரு மரத்திலிருந்து மற்ெருரு மரத்திற்குப் பாயும்.

அணில்கள் மரத்துக்கு மரம் தாவி விளையாடு-வதைப் பார்த்தால் அழகாயிருக்கும். மரத்தில் நன்ருய்ப் பழுத்த பழங்களைத்தான் அணில்கள் தின்னும். பழத்தின் கொட்டைகளையும் பல்லால் உடைத்துத் தின்னும்.

தாய் அணில் தன் குட்டிக்குப் பால்கொடுத்து வளர்க்கும். அணில்களின் முதுகில் மூன்று வரிகள் இருக்கும். அணில் சாதுவான பிராணி. நாம் அதனிடத்தில் அன்பாய் இருக்கவேண்டும்.



6. பூனை.

பூனை எலியைப் பிடிக்கும். பூனைக்கு இரவில் கண் நன்றாய்த் தெரியும். பூனை கால் சத்தம் கேளாமல் மெல்ல நடக்கும். அப்போது அது தன் நகங்களை உள்ளே இழுத்துக்கொள்ளும்.

பூனையை வீட்டில் வளர்த்தால் எலிகள் பயந்து ஓடிப்போம். ஆதலால், பூனைக்கு "எலிப் புலி" என்று ஒரு பெயர் உண்டு.

அதோ, பார். ஒரு குழந்தை பூனையோடு விளையாடுகிறது. அந்தப் பூனை ஒரு பந்தை வைத்துக்கொண்டிருக்கிறது.

பந்தை உருட்டுவதில் பூனைக்குப் பிரியம். குழந்தையும் பந்தை உருட்டும். சிறு குழந்தை பூனையுடனே பிரியமாக விளையாடும்.



7. கோழி.

கோழியை வீட்டில் வளர்ப்பார்கள். பெட்டைக்கோழி முட்டையிட்டு அடை காக்கும். தன் குஞ்சுகளோடு இரை பொறுக்கும்.

கோழி குப்பையைக் கிளறி உணவு பொறுக்கித் தின்னும். தன் குஞ்சுகளைச் சிறகால் அணைத்துக் காக்கும். பூனையைக் கண்டால் கோழிக்குஞ்சுகள் பயப்படும்.

கோழிக்கு இறகுகள் உண்டு. ஆயினும் அது உயரமாகப் பறக்காது. கோழி வீட்டுக்கூரைமேல் ஏறி நின்று கூவும்.

சேவல் அதிகாலையில் எழுந்து கூவி நம்மைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிடும்.



8. மான்.

நாலுகால் செந்துக்களில் மான் ஒன்று. மான்களில் கலைமான், புள்ளிமான், கவரிமான் என்று பலவகை உண்டு.

ஆண்மான்களுக்குக் கொம்புகள் உண்டு. பெண்மான்களுக்குக் கொம்பு இல்லை. கலைமான் கொம்பு கிளைகிளையாய் இருக்கும்.

மான் கொம்பு கத்திப்பிடி, சிமிழ் முதலியவை செய்ய உதவும். மான் கொம்பு மருந்துக்கும் உதவும்.

மானுக்குக் கால்கள் மென்மையாயும் நீளமாயும் இருக்கும். அதன் உடம்பு இலேசாய் இருக்கும். ஆகையால் அது வேகமாய் ஓடும்.

மானின் கண்கள் அழகாயிருக்கும். மான் புல்லையும் இளந்தளிர்களையும் தின்னும்.



9. குதிரை.

குதிரை வண்டியிழுக்கவும் சவாரிசெய்யவும் உதவுகிறது. ஐரோப்பா முதலிய தேசங்களில் ஏர் உழவும் குதிரை உபயோகப்படுகிறது.

அரபிதேசத்தில் குதிரைகள் அதிகம். அந்தக் குதிரைகள் மிகவும் பெரியவைகளாயிருக்கும்; அதிக வேகமாய் ஓடும்.

குதிரைக்குக் கொம்பு இல்லை. அதன் பிடரியில் மயிர் வளர்ந்திருக்கும். குதிரைக்குக் குளம்புகள் உண்டு. அவை பிளப்பில்லாமல் இருக்கும்.

குதிரைக்குக் கொள்ளு, கடலை முதலிய தானியங்களும் புல்லும் தீனியாகும். குதிரை சுகத்தை விரும்பும். நாம் அதை அருமையாய் வளர்க்கவேண்டும்.

84625



10. யானை.

பூமியில் வசிக்கும் பிராணிகளுக்குள் பெரியது யானை. அது குதிரை, மாடு முதலியவைகளைப் போலவே மனிதருக்கு அடங்கி உதவி செய்யும்.

யானைமேல் அம்பாரி வைத்து அரசர்கள் ஊர்கோலம் போவார்கள். காட்டிலும் மலைகளிலும் உள்ள பெரிய மரங்களை யானை பெயர்த்துத் தள்ளும்.

யானையின் முகத்திலிருந்து நீளமாய் உறுப்பு ஒன்று தொங்குகிறது, பார். அதற்குத் தும்பிக்கை என்று பெயர். அதுவே அதற்குக் கையாகவும் மூக்காகவும் உபயோகப்படுகிறது.

யானை வாயில் இருந்து இரண்டு பக்கங்களிலும் நீளமாய் முளைத்திருப்பவைகளுக்குத் தந்தங்கள் என்று பெயர். யானைத் தந்தத்தால், சிறு பெட்டி, சீப்பு, கத்திப்பிடி முதலியவை செய்வார்கள்.



11. மயில்.

மயிலை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது மிகவும் அழகான பக்ஷி. மயிலின் தோகை நீள-மாயிருக்கும். அதில் கண்கள்போல், பல புள்ளி-கள் இருக்கும்.

மயில் தோகையில் பச்சை, ஊதா, கறுப்பு, மஞ்சள் முதலிய பல வர்ணங்கள் உண்டு. சந்-தோஷம் வந்தால் மயில் தோகையை விரித்து ஆடும். அப்போது அது மிகவும் அழகாயிருக்கும். பெண்மயிலின் தோகை அவ்வளவு நீளமாய் இராது.

மயில் இறகுகளால் விசிறி கட்டுவார்கள். மயிலின் குரல் காதுக்கு இனிமையாயிராது. மயிலுக்குத் தலையில் ஒரு கொண்டை உண்டு. அநேகர் அழகுக்காக மயிலைப் பிடித்து வளர்க்கிறார்கள்.



12. புரு.

புருவை அநேகர் வளர்க்கிறார்கள். புருக்களில் பச்சைப்புரு, மணிப்புரு, மாடப்புரு முதலிய பலவகை உண்டு.

புரு மிகவும் கூச்சமுள்ளது. நாம் கிட்டேபோனால் அது பயந்து பறந்து போய்விடும். பறக்கவிட்டால் வெகுதூரம் பறந்து போகும். ஆனால் திரும்பி வீட்டுக்குவந்து சேர்ந்துவிடும்.

நெல் முதலிய தானியங்களே புருவுக்குத் தீனி. புருக்கூடு அறை அறையாய் வகுக்கப் பட்டிருக்கும். குஞ்சுகள் தாயின் அறையில் கூடி இருக்கும். அவைகளுக்குத் தாய்ப்புரு இரைதேடிக் கொடுக்கும்.



13. வாத்து.

வாத்து பெரும்பாலும் வெள்ளை நிறமானது. வேறு நிறமான வாத்துகளும் உண்டு. அதன் மூக்கும் காலும் சிவப்பாய் இருக்கும். வாத்து தண்ணீரில் நன்றாய் நீந்தும்.

கோழியைப் போலவே வாத்தையும் வீட்டில் வளர்க்கிறது உண்டு. வாத்துமுட்டை கோழிமுட்டையைவிடப் பெரியதாயிருக்கும்.

வாத்துக்கு அடைகாக்கத் தெரியாது. ஆகையால் வாத்துமுட்டைகளைக் கோழிமுட்டைகளோடு கலந்து அடை வைப்பார்கள். கோழி அவைகளைத் தன் முட்டைகளென்று நினைத்து அடைகாக்கும். அடை காத்தால்தான் முட்டையில் இருந்து குஞ்சு வெளிவரும்.

வாத்து நெல் முதலிய தானியங்களையும், நீரில் உள்ள பூச்சி, புழுக்களையும் தின்னும்.



14. ஆந்தை.

ஆந்தை ஒரு பறவை. அதன் குரல் நன்ருய் இராது. ஆந்தை கத்தினுல் அலறுகிறது என்று சொல்வார்கள்.

ஆந்தையின் விழிகள் பெரியவை. பகலில் அதற்குக் கண் நன்ருய்த் தெரியாது. இராத்திரியில்தான் அதற்குக் கண் நன்ருய்த் தெரியும். அப்பொழுதுதான் அது வெளியே போய்ச் சஞ்சரிக்கும்.

அது சிறு பக்ஷிகளேயும், சுண்டெலிகளேயும், மூஞ்சூறுகளேயும் இரவில் பிடித்துக் கொன்று தின்னும். மற்றப் பக்ஷிகள் ஆந்தையைப் பகலில் கண்டால் மூக்கினுல் கொத்தியும் நகங்களால் பிருண்டியும் இம்சிக்கும்.

15. பருந்து.

நீ பருந்தைப் பார்த்திருக்கிருயா? அது மாமிசம் தின்னும் பக்ஷிகளில் ஒன்று. அதன் மூக்கு நுனியில் கூராய் வளைந்திருக்கும். அதன் கால் நகங்கள் கூராய் இருக்கும்.

பருந்து ஆகாயத்தில் அதிக உயரம் பறக்கும். அது மேலே பறந்து போகும்போதும், கீழே இறங்கி வரும்போதும் வட்டமிட்டு வட்டமிட்டுப் பறக்கும்.

தரையில் கோழிக்குஞ்சு, தவளை முதலிய சிறு பிராணிகளைக் கண்டால், பருந்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவற்றைத் தூக்கிக்கொண்டு போய்விடும். தண்ணீருக்கு மேலே வரும் மீன்களையும் கொத்திக்கொண்டு போய்விடும்.



16. குள்ள நரியும் திராக்ஷைக் குலையும்.

(ஒரு பாட்டு)

இராகம்—நாதநாமக்கிரியை .... ஆதி தாளம்.

லல்லா லல்லா-லல்லா லல்லா-லல்லல-லல்லல லா
லால லல்ல-லால லல்ல-லல்லல லல்லல-லா

1. இரை கிடைக்கா தவஸ்தைப் படும்
இடக்கு நரி ஒன்று
இங்கு மங்கு மாய்த் திரிந்தே
எண்ண மிடு கையிலே (லல்லா)

2. குற்ற மில்லாத் தோட்ட மொன்றில்
கொடிமுந் திரிப் பழக்
குலைகள் தொங்க அதனைப் பார்த்துக்
கொண்டு போய் விட (லல்லா)

3. குதித்துக் குதித்துக் குதித்துக் குதித்துக்
காலசைந் துமே
குலைகள் எட்ட இல்லை என்று
குந்திக் கொண்டுமே (லல்லா)

4. இனிமே லெனக் ககப்பட்டாலும்
இதனைத் தின்பேனோ
எனக்கு வேண்டாம் புளிக்குஞ் சீச்சீ!
என்று போயிற்று (லல்லா)

5. இதனைப் போல மனித ரெல்லாம்
எடுத்த காரியம்
ஏற்ற படியே முடியா விட்டால்
இகழ்ந்து சொல்வரே (லல்லா)



17. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

ஒரு ஓநாய் மலையருவியிலே போய்த் தண்ணீர் குடித்தது. அதற்கு வெகுதூரம் கீழே ஆட்டுக்குட்டி ஒன்று தண்ணீர் குடிக்கப்போயிற்று.

ஓநாய் அந்த ஆட்டுக்குட்டியைத் தூரத்தில் நின்று பார்த்து அதனண்டை போய் "நான் குடிக்கும் தண்ணீரை நீ ஏன் இப்படி கலக்குகிறாய்?" என்று கேட்டது.

"உன்னிடத்திலிருந்து அல்லவா தண்ணீர் என்னிடம் வருகிறது? நான் கலக்குகிற தண்ணீர் உன்னிடம் எப்படி வரும்?" என்று ஆடு பயந்து அதற்கு மறுமொழி சொல்லிற்று.

"ஆறு மாதத்திற்கு முன்னே நீ ஏன் என்னைத் திட்டினுய்?" என்று ஓநாய் மறுபடி ஆட்டுக்குட்டியைக் கேட்டது.

ஆட்டுக்குட்டி நடுநடுங்கி, "ஐயோ! நான் பிறந்து இன்னும் மூன்று மாதங்கூட ஆகவில்லையே!" என்றது.

"நீ திட்டாவிட்டாலும் உன் பாட்டனுவது என்னைத் திட்டியிருப்பான்" என்று சொல்லி ஓநாய் அந்த ஆட்டுக்குட்டியைப் பிடித்துக்கொன்று தின்றுவிட்டது.

ஒருவன்மேல் சிறிதும் குற்றம் இல்லாமல் இருந்தாலும், பொல்லாதவர்கள் இப்படித்தான் வீணுன பழிசொல்லி அவனை வருத்தப்படுத்துவார்கள்.

18. ஆலமரம்.

ஆலமரம் மிகவும் பெரியது. அதன் நிழலில் ஒரு பெரிய சைனியம்கூடத் தங்கலாம். ஆனால், அதன் பழம் மிகவும் சிறியது. இலந்தைப் பழத்தளவுதான் இருக்கும். இதைப்பற்றி ஒரு கதை உண்டு. அதாவது:—

நாட்டுப் புறத்தான் ஒருவன் வெயிலுக்கு ஒரு ஆலமரத்தடியிலே வந்து படுத்தான். அவன் மரத்திலே பழுத்திருந்த ஆலம்பழத்தை அண்ணாந்து பார்த்து, 'ஆ! கடவுள் இவ்வளவு பெரிய மரத்துக்கு இத்தனை சிறிய பழத்தை உண்டாக்கி இருக்கிறார். ஆனால், அற்பமான பூசனிக்கொடிக்கு எவ்வளவு பெரிய காய் உண்டாகச் செய்கிறார்? இதென்ன அறிவு? என்று கடவுளைப் பழித்தான். உடனே ஒரு ஆலம்பழம்

அந்த மரத்திலிருந்து அவனது கண் புருவத்தின் மேலே விழுந்தது.

அதனுல் அவனுக்கு நல்ல புத்தி வந்தது. 'ஆ! இந்த ஆலம்பழம் பூசனிக்காயளவு பெரியதாயிருந்தால் இந்நேரம் என் மண்டை உடைந்து போயிருக்குமே! கடவுளுக்குத் தெரி-யாததும் உண்டோ? என்று சொல்லிக் கட-வுளைத் துதித்தான்.



19. இரண்டு ஆடுகள்.

ஒரு கிராமத்தில் சிறிய ஆறு ஒன்று ஓடியது. அந்த ஆற்றைக் கடந்து போவதற்கு ஒரு முழ அகலத்தில் ஒரு பாலம் இருந்தது.

ஒரு சமயம் இரண்டு ஆடுகள் அந்தப் பாலத்தின் வழியாகப் போக நேர்ந்தது. ஒரு ஆடு இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போக-வேண்டியிருந்தது. மற்ரெரு ஆடு அக்கரையி லிருந்து இக்கரைக்கு வரவேண்டி யிருந்தது.

பாலத்தின் நடுவில் இரண்டும் ஒன்றை ஒன்று சந்தித்தன. அந்தப் பாலத்தின்மேல் ஒரே ஒரு ஆடுதான் நடந்துபோகலாம். ஒன் றின் பக்கத்தில் மற்ரென்று போக இடமில்லை. திரும்பவும் இடமில்லை. ஆதலால் அவை நேராகப் போகவும் முடியவில்லை; வந்தவழியே திரும்பிப் போகவும் முடியவில்லை.

அதனுல் அவை இரண்டும் சண்டைபோட ஆரம்பித்தன. கடைசியில் அவைகளில் ஒன்று “நாம் இப்படி சண்டை போடுவது மூடத்தனம் அல்லவா? இதனுல் நமக்குப் போக வழி ஏற்-படுமா? சண்டை வேண்டாம். நான் படுத்துக்-கொள்ளுகிறேன். நீ என்மேல் ஏறிப் போய்-விடு. பிறகு நான் எழுந்து போய்விடுகிறேன்” என்று சொல்லிப் பாலத்தின்மேல் படுத்துக்-கொண்டது.

அது சொன்ன உபாயப்படியே மற்றது அதன்மேல் ஏறி அப்பாலே போய்விட்டது. பிறகு படுத்திருந்த ஆடு எழுந்து தன் வழியே போய்விட்டது. அதன் புத்திசாலித் தனத்-தைப் பார்த்தீர்களா!

20. சூரிய உதயம்.

சூரியன் உதித்து வெளிச்சமாகிற காலத்தைப் பகல் என்கிறோம். சூரியன் அஸ்தமித்து வெளிச்சம் இல்லாமல் இருக்கிற காலத்தை இராத்திரி என்கிறோம். சூரியன் உதிக்கும் காலத்துக்கு விடியற்காலம் என்று பெயர்.

விடியற்காலத்தில் பக்ஷிகள் கூவத் தொடங்கும். மேலே உள்ள படத்தைப் பார். அதில் சூரியன் உதயமாகிப் பிரகாசிக்கிறது. சூரியன் மேலே வரவர, புஷ்பங்கள் மலரும்.

பொழுது விடிந்தவுடனே நாம் படுக்கையை விட்டு எழுந்திருப்பது நல்லது. அப்பொழுது காற்று குளிர்ந்துவீசும். புத்தி தெளிவாய் இருக்கும். உடம்பு கலகலப்பாய் இருக்கும்.

21. சந்திரனும் நக்ஷத்திரங்களும்.

சூரியன் மறைவதை அஸ்தமிக்கிறது என்று சொல்வார்கள். சூரியன் கிழக்கே உதித்து மேற்கே அஸ்தமிக்கும். சூரியன் அஸ்தமிக்கும்போது சிவப்பு நிறமாய்க் காணப்படும். அப்போது பக்ஷிகள் தங்கள் தங்கள் கூடுகளில் போய் அடங்கும்.

சூரியன் மறைந்தபிறகு எங்கும் இருட்டாயிருக்கும். அப்பொழுது இரவு வந்துவிட்டதென்று சொல்கிறோம். இரவில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கிறதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

நக்ஷத்திரங்கள் பூமியைவிடப் பெரியவை. அதிக தூரத்தில் இருப்பதால் நம் கண்ணுக்குச் சிறியவைகளாய்த் தோற்றுகின்றன. சந்திரன் நமக்குப் பெரியதாகத் தோற்றுகிறது. ஆனால், அது நக்ஷத்திரங்களைவிடச் சிறியதுதான். நக்ஷத்திரங்களைவிடச் சமீபத்தில் இருப்பதால் நமக்கு அது பெரியதாய்த் தோற்றுகிறது.

சந்திரன் வட்டவடிவமானது. ஆனால், எப்பொழுதும் ஒரே வடிவமாய்க் காணப்படுவதில்லை. சற்றேறக்குறைய முப்பதுநாளைக்கு ஒருதரம் அது பூரணமான வட்ட வடிவமாய்க் காணப்படும். அந்த நாளுக்குப் பௌர்ணமி என்று பெயர்.

பௌர்ணமிக்கு மறுநாளிலிருந்து பதி-னைந்து நாள் சந்திரன் கொஞ்சம் கொஞ்ச-மாகத் தேய்ந்துகொண்டே வரும். பதினைந்-தாம் நாள் அது அடியோடு மறைந்துபோம். அந்த நாளுக்கு அமாவாசை என்று பெயர்.

அப்படி மறைந்த சந்திரன் அமாவாசைக்கு மறுநாளிலிருந்து பதினைந்து நாள் வரையிலும் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்துகொண்டே-வரும். பதினைந்தாம் நாள் அது முன்போலப் பூரணமான வட்ட வடிவமாய்க் காணப்படும். அப்போது அதைப் ‘பூரணச் சந்திரன்’ என்-பார்கள்.

சந்திரன் குறைந்து காணப்படும்போது அதைப் ‘பிறைச்சந்திரன்’ என்பார்கள். சந்-திரனுடைய வெளிச்சத்தை நிலவு என்று சொல்வார்கள்.

22. சிங்கமும் சுண்டெலியும்.

காட்டில் ஒரு மரத்தடியில், சிங்கம் ஒன்று படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அப்போது ஒரு சுண்டெலி அதன்மேல் ஏறி விளையாடிற்று. அதனால் சிங்கத்தின் தூக்கம் கலைந்துவிட்டது.

அது கர்ச்சித்துக்கொண்டு எழுந்தது. அந்த அதிர்ச்சியில் சுண்டெலி கீழே விழுந்துவிட்டது. சிங்கம் அதைக் கண்டுவிட்டது. உடனே 'இது தான் தொந்தரவுபண்ணி நம் தூக்கத்தைக் கலைத்தது' என்று அறிந்துகொண்டு, அந்தச் சுண்டெலியைக் காலால் நசுக்கிக் கொல்லப்-போயிற்று.

அப்போது சுண்டெலி நடுநடுங்கிச் சிங்கத்-தைப்பார்த்து, "ஐயா, நான் என்ன ஒரு அற்பப் பிராணி. என்னைக் கொல்வதால் உங்களுக்கு என்ன இலாபம்? தயவுசெய்து மனமிரங்கி என்னை விட்டுவிடுங்கள்," என்றது.

அதற்குச் சிங்கம் "நீ மகா துஷ்டன். ஒரு கட்டைவிரல் அவ்வளவான நீ எவ்வளவு விஷமம் செய்கிறாய்! கொஞ்சங்கூடப் பயமில்-லாமல் என்னுடைய தூக்கத்தைக் கலைத்தா யல்லவா?" என்றது.

"ஏதோ தெரியாமற் செய்துவிட்டேன். மன்னித்துவிடுங்கள். நான் உங்களை என்றும் மறவேன்" என்று சுண்டெலி கெஞ்சியது.



சிங்கம் சிரித்துக்கொண்டு சுண்டெலியை நோக்கி "நல்லது, ஓடிப்போ" என்றது. சுண்டெலி ஓடிப்போய்விட்டது.

சிலநாளைக்குப் பிறகு அந்தச் சிங்கம் வேடன் வலையில் அகப்பட்டுக்கொண்டது. தப்பி ஓட-முடியவில்லை. அதனால், காடுமுழுதும் நடுங்கும்-படி அது கர்ச்சித்தது.

அந்தச் சத்தம் சுண்டெலியின் காதில் விழுந்தது. உடனே அது வளையிலிருந்து ஓடிவந்து பார்த்தது. தன்னை மன்னித்த சிங்கம் வலையில் அகப்பட்டிருப்பதைக் கண்டது. உட-னே தன் பற்களால் வலையை அறுத்துச் சிங்கத்-தைத் தப்புவித்தது.



23. நாயும் நிழலும்.

இராகம், இந்துஸ்தான் காபி.] [ரூபகதாளம்.

பல்லவி.

நாயின்பே ராசைதன்னை
நன்றாய்ச் சொல்லுவேன்—கேளும்

அநுபல்லவி.

பாயும் ஆட்டின் மாமிசம் வாயாற் கௌவியே
பாங்காகவே தின்னத்தான் கொண்டுபோகும். நா.

சரணங்கள்.

1. போகும் வழியில்—ஓர் ஓடையிதேது
புதியதென்று தான்-எட்டிப் பார்த்தபோதுதன்
தேகம்ஜலத்தில் காணக்-கோபங்கொண்டந்தச்
செந்நாயைக் கவ்வ வாய்-திறந்தேமாந்த. நா.

2. நியாயமாய்ப் போனுல்-நற்சுகங்கிடைக்குமே
நடுக்கொள்ளை யிட்டால் நாசந்தான் நேருமே
ஆ! ஆ! ஆ! இந்த நாய் தனக்கு நல்லவிதி
அயன் போட்டிருக்க-ஏனோ இந்தக்கதி. நா.

3. இப்படியே வெகு பேர்-பேராசையால்
இழந்தாரே தங்கள்-கைப்பொருள் ஆகையால்
அப்படிப் பேராசை-கொள்ளாமை அழகு
ஆனதனுல் நீ நல்-லோருடன் பழகு. நா.

24. பூஞ்செடி.

பூமியில் சிறுவிதையை நட்டால், அதிலிருந்து செடி முளைக்கும். உயரமாயும் பருமனும் வளர்ந்தால் அதற்கு மரம் என்று பெயர்.

புஷ்பச் செடிகள் அநேகமாய் மரமாக வளர்வதில்லை. சிறுசெடிகளாகவே இருக்கும். செடிகள் அடிமுதல் நுனிவரையில் இலைகள் அடர்ந்து பச்சென்றிருக்கும்.

பூஞ்செடிகளைத் தொட்டியில் வைத்தும் வளர்க்கிறது உண்டு. செடியில் பூ உண்டாவதற்குமுன் அரும்பு உண்டாகும். அதை மொக்கு என்றும் மொட்டு என்றும் சொல்லுவார்கள்.

அரும்புக்கு அதிக வாசனை இராது. அரும்பு மலர்ந்து பூவாகும். அப்பொழுதுதான் அதன் வாசனை நன்றாய் வீசும். புஷ்பங்கள் எவ்வளவு அழகாய் இருக்கிறன, பார்.

பூவினால் மாலை கட்டுவார்கள்; பூஞ்செண்டு செய்வார்கள். ரோஜாப்பூ மற்றப் பூக்களை விட அழகானது. அதிலிருந்துதான் பன்னீர் செய்கிறார்கள்.

25. தென்னை.

நம் நாட்டில் தென்னை மரங்கள் மிகுதியாக உண்டு. தென்னை மிகவும் உயரமாய் வளரும். அதற்குக் கிளைகள் இல்லை. கிளைகளுக்குப் பதி-

லாக மட்டைகள் இருக்கின்றன. இலைகளும் இல்லை. இலைகளுக்குப பதிலாக ஓலைகள் இருக்கின்றன.

தென்னைமரத்தில் காய்க்கும் காய்க்குத் தேங்காய் என்று பெயர். தேங்காய் கீழே விழுந்தால் உடையாதபடி நாரும் மட்டையும் அதை மூடிக்கொண்டிருக்கும்.

முற்றாத தேங்காய்க்கு இளநீர் என்று பெயர். நன்றாய் முற்றிக் காய்ந்த தேங்காய்க்குக் கொப்பரை என்று பெயர்.

முற்றிய தேங்காயை மண்ணிற் புதைத்து நீர் விடுவார்கள். அது முளைத்துத் தென்னம் பிள்ளையாகிப் பிறகு தென்னைமரமாகும். தென்னை மரத்தைப் பத்திரமாய்க் காப்பாற்றினால் பல வருஷங்கள் வரையில் பலன் கொடுக்கும்.

தென்னைமரத்தில் ஒவ்வொரு பகுதியும் பிரயோஜனப்படும். அடிமரம் உத்தரம், தூண் முதலியவைகள் செய்ய உபயோகப்படும்; மட்டைகளைக் கீற்றாக முடைந்து கூறைபோடவும், தட்டிகட்டவும் உபயோகிப்பார்கள்.

இளநீர் வெயில் காலத்தில் குளிர்ச்சியும் இனிமையுமான பானம் தரும். தேங்காய் தனியாகவும் காய்கறிகளோடு சேர்த்தும் புசிக்க உதவும். முற்றிக் காய்ந்த கொப்பரையிலிருந்து தேங்காய்நெய் எடுப்பார்கள். தேங்காய்நார் கயிறு திரிக்க உதவும். தேங்காய் ஓடு அகப்பை, குடுக்கை முதலியவை செய்ய உபயோகப்படும்.

26. தவளை.

அதோ ஒரு பெரிய தவளை இருக்கிறது, பார். தவளை குளம், கிணறு, குட்டை முதலியவைகளில் வசிக்கும்.

தவளையின் கண் எவ்வளவு பெரியதாயிருக்கிறது, பார். அது எல்லாவற்றையும் நன்ருய்ப் பார்க்கும். மிகவும் சிறிய பூச்சிகளும் தவளையின் கண்ணுக்குத் தெரியும்.

தவளை குளத்தில் குதித்து ஓடும். அது நன்ருக நீந்தும். தாமரைக்குளத்தில் தவளை நீந்துவதைப் பார்த்திருக்கிருயா? நீந்திக்கொண்டேபோய் அது தாமரை இலைமேல் உட்காரும். அங்கிருந்து மறுபடியும் நீரிலே குதித்துப் பாய்ந்து ஓடும்.

தவளை சாதுவான ஒரு செந்து. தவளை-களாலே தோட்டங்களுக்கு வெகு அநுகூலம் உண்டு. தோட்டத்துப் பயிர்களைத் தின்கிற சில பூச்சிகள் உண்டு. அந்தப் பூச்சிகளைத் தவளை தத்திப்போய் பிடித்துத் தின்றுவிடும்.



தவளை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். முட்டையைவிட்டு வெளியே வரும்போது தவ-ளைக்குஞ்சு, ஒரு சிறு கறுப்பு மீனைப்போல இருக்-கும்: அப்பொழுது அதற்குக் கால் இராது. உருண்டதலையும் நீண்டவாலும் இருக்கும். நாள் போகப்போக வால் குறையும்; கால் உண்டாகும். பிறகுதான் அது தவளை உருவம் அடையும்.

தவளையின் நாக்கில் ஒருவகையான பிசின் இருக்கிறது. அதனுல் எந்தப் பூச்சியும் அதன் வாயில் பட்டவுடன் ஒட்டிக்கொள்ளும்.



27. வண்டிகள்.

கேசவன்.—கோவிந்தா, நீ வண்டியில் ஏறிப் போயிருக்கிருயா?

கோவிந்தன்.—ஓ! எங்கள் வீட்டில் மாட்டு வண்டி ஒன்று இருக்கிறது, அதில் நான் என் தகப்பனுருடன் ஏறிப்போயிருக்கிறேன்.

கேசவன்.—எங்கள் வீட்டில் குதிரைவண்டி இருக்கிறது.

கோவிந்தன்.—குதிரைவண்டி வேகமாய் ஓடும். அடுத்த பக்கத்தில் ஒரு வண்டியின் படம் இருக்கிறது, பார்.

கேசவன்.—ஆமாம். இது குழந்தைகள் வண்டி. இதில் சிறு குழந்தைகளை வைத்து இழுத்துக்கொண்டு போவார்கள்; இல்லாவிட்டால் தள்ளிக்கொண்டு போவார்கள்.

கோவிந்தன்.—இதற்கு நாலு சக்கரங்கள் இருக்கின்றன. இரண்டு சக்கரம் உள்ள வண்டி-கூட உண்டு.

கேசவன்.—அதையும் நான் பார்த்திருக்கிறேன். மாட்டு வண்டிகளுக்கு அநேகமாய்



இரண்டு சக்கரங்கள்தான் இருக்கும். குதிரை வண்டியில் இரண்டு சக்கர வண்டியும் உண்டு; நாலுசக்கர வண்டியும் உண்டு.

கோவிந்தன்.—இழுத்துக்கொண்டு போகிற வண்டியில் இரண்டு சக்கர வண்டி இருக்கிறது. தெரியுமா ?

கேசவன்.—ஆமாம். அதற்கு 'ரிக்ஷா' என்று பெயர். நீ 'பைஸிகில்' வண்டி பார்த்திருக்கிருயா ?

கோவிந்தன்.—ஓ! என் அண்ணனுக்கு ஒரு பைஸிகில் வண்டி இருக்கிறது. அதில் ஏறித்தான் அவன் பள்ளிக்கூடத்துக்குப் போவான்.

கேசவன்— நான்கூட ஒரு பைஸிகில் வண்டி வாங்கித் தரும்படி என் தகப்பனுரைக் கேட்கப் போகிறேன்.

28. வாழை.

தென்னை மரம்போல வாழையும் நமக்கு மிகவும் உபயோகமுள்ள ஒரு மரம். வாழைமரத்துக்கும் கிளைகள் இல்லை: இலைகள்தான் உண்டு.

மற்ற மரங்களைப்போல வாழைமரம் கெட்டியாய் இராது: பச்சென்று ஈரமாயும் மெதுவாயும் இருக்கும். அதை மடல் மடலாக உரிக்கலாம்.

வாழை இலை நீளமாயும் அகலமாயும் இருக்கும். அதில் சாதம் படைத்துச் சாப்பிடலாம். வாழைப் பூவும் வாழைக் காயும் கறி சமைக்க உதவும். வாழைப்பூ ஒரு பெரிய மொக்குப்போல இருக்கும். அதன் இதழ்கள் முற்ற முற்ற மடல்

மடலாய் விரிந்து உதிர்ந்துபோகும். அதிலிருந்துதான் காய்கள் உண்டாகின்றன.

வாழைக்காய், ஒரே குலையில் நெருக்கமாய் நிறைந்திருக்கும். அதைத் 'தாறு' என்று சொல்வார்கள். ஒரு தாற்றில் பல சீப்புகள் இருக்கும். ஒவ்வொரு சீப்பிலும் ஏறக்குறைய இருபது காய்கள் இருக்கும்.

வாழைக்காயைப் பழுக்கவிட்டால் வாழைப்பழமாகும். வாழைப்பழம் தின்பதற்கு ருசியாயிருக்கும். சுவாமிக்குத் தேங்காயும் வாழைப் பழமும் வைத்து நைவேத்தியம் செய்வது வழக்கம்.

வாழையில் செவ்வாழை, பச்சைவாழை, பேயன் வாழை, கதலி வாழை, கப்பல் வாழை, மொந்தன் வாழை, இணை வாழை, மருத்துவ வாழை, பன்றி வாழை, ஆனை வாழை, கருவாழை, ரஸ்தாளி வாழை என்று பல



வகைகளுண்டு. ரஸ்தாளி வாழையின் பழந்தான் மிகவும் சாதாரணமானது.

29. பறக்கும் பூச்சிகள்.

பறக்கும் பூச்சிகளில் பலவகை உண்டு. அவைகள் மரம் செடிகள் உள்ள இடத்தில்தான் அதிகமாய் இருக்கும். அவைகளை வண்ணாரப்-பூச்சி என்றும் தட்டாரப்பூச்சி என்றும் சொல்வதுண்டு.

இந்தப்பூச்சிகள் பல வர்ணங்கள் உடையன. பார்ப்பதற்கு அழகாயிருக்கும். எந்தப் பூச்சி எந்-தப் பூவில் வசிக்கிறதோ, அந்தப்பூச்சி அந்தப் பூவின் நிறமாகவே இருக்கும். அதனால் அது தனக்கு விரோதமான பிராணிகளின் கண்களுக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்கிறது.

பெரிய பூச்சிகள் மரங்களின் இலைகளின்மேல் முட்டையிடும். ஒரு பூச்சி ஒரேதடவையில் பல முட்டைகள் இடும். முட்டை இட்டவுடனே சில தாய்ப் பூச்சிகள் இறந்துவிடும். சூரியவெப்-பத்தினால் சூடேறிய பிறகு முட்டைகள் வெடிக்-கும். அப்போதுதான் குஞ்சுகள் வெளிப்படும்.

முட்டையிலிருந்து வெளிவரும்போது அ-வைகளுக்குச் சிறகு இராது. அப்போது அவை-களைக் 'கம்பளிப்பூச்சி' என்று சொல்வார்கள். நாள்போக நாள்போக அவைகள் பெரியவைக-ளாகும். பிறகு அவைகளுக்குச் சிறகு உண்டாகும். அதன் பிறகுதான் அவைகள் பறக்கக்கூடும்.

30. செய்யுள் பாடம்.

(உலகநீதி)

1. ஓதாமல் ஒருநாளும்
   இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
   சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும்
   மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ
   டிணங்க வேண்டாம்.
5. போகாத இடந்தனிலே
   போக வேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித்
   திரிய வேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச்
   சொல்ல வேண்டாம்.
8. நஞ்சுடனே ஒருநாளும்
   பழக வேண்டாம்.
9. நல்லிணக்கம் இல்லாரோ
   டிணங்க வேண்டாம்.
10. அஞ்சாமல் தனிவழியே
    போக வேண்டாம்.
11. அடுத்தவரை ஒருநாளும்
    கெடுக்க வேண்டாம்.
12. மனம்போன போக்கெல்லாம்
    போக வேண்டாம்.
13. மாற்றானை உறவென்று
    நம்ப வேண்டாம்.
14. தனம்தேடி உண்ணாமல்
    புதைக்க வேண்டாம்.
15. தருமத்தை ஒருநாளும்.
    மறக்க வேண்டாம்.

16. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.
17. கொலைகளவு செய்வாரோ
டிணங்க வேண்டாம்.
18. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.
19. வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத்
திரிய வேண்டாம்.
20. மூத்தோர்சொல் வார்த்தைகளை
மறக்க வேண்டாம்.
21. முன்கோபக் காரரோ
டிணங்க வேண்டாம்.
22. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.
23. சேராத இடந்தனிலே
சேர வேண்டாம்.
24. செய்தநன்றி ஒருநாளும்
மறக்க வேண்டாம்.
25. உற்றாரை உதாசினங்கள்
சொல்ல வேண்டாம்.
26. புறஞ்சொல்லித் திரிவாரோ
டிணங்க வேண்டாம்.
27. வாதாடி வழக்கழிவு
சொல்ல வேண்டாம்.
28. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.
29. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.
30. திறம்பேசிக் கலகமிட்டுத்
திரிய வேண்டாம்.

இந்தியாதேச சக்கரவர்த்தியாகிய

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

வாழ்த்துப்பாட்டு.

தந்த தந்த தந்த தந்த
தானதன தாத்தனா

வந்தனங்கள் தந்து நின்று
பாடி நிதம் வாழ்த்துவமே

எந்தம் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்
வாழ்கவென வாழ்த்துவமே

அந்த முள்ள மேரி ராணி
அவர்களோடும் வாழ்கவென

சிந்தை ஒன்றி வந்து வந்து
பாடி நிதம் வாழ்த்துவமே. (தந்த)

PRINTED AT THE INTERNATIONAL PRINTING WORKS, G.T., MADRAS.—3M—1-1934.

சுகாதார பால நீதி வாக்கியங்கள்.

1. அசுத்த மகற்று.
2. அழுக்கே நோய்க்கிடம்.
3. அம்மை குத்துவதே செம்மையாகும்.
4. ஆருக்குங் காற்று அவசியம் வேண்டும்.
5. இடஞ் சுத்தமானால் எலி கரப்பான் சேரா.
6. ஈ கொசு சேரா இடஞ் சுத்தமானால்.
7. ஈ கொசு பேன்கள் நோய் வழியாகும்.
8. ஈ நோய்ப் புழுக்களைத் தானாய்ப் பரப்பும்.
9. உடை உடல் இரண்டையும் தடையின்றி யலம்பு.
10. உணவைக் கரப்பான் ஊர்ந்து கெடுக்கும்.
11. எலியால் பிளேக் எல்லார்க்கும் வரும்.
12. எலி மூடு கரப்பான் இடர் விளைவிக்கும்.
13. ஏனத்தை விளக்கி எதையுஞ் சாப்பிடு.
14. ஐயம் கொண்டாலும் அழுகலைத் தின்னாதே.
15. ஒருபொழுதிருந்தால் உடம்புக்கு நல்லது.
16. ஓடி வெளியில் நாடிவிளையாடு.
17. ஔவை நீதியை அக்கரையாய்ப் படி.
18. கரப்பான் பூச்சியைக் கண்டபோதகற்று.
19. காய்ச்சல் கொசுவால் கடுகிப் பரவும்.
20. கொசுக்களை யகற்றினால் கொள்ளைநோய் தீரும்.
21. புலிக்கிடந் தரினும் எலிக்கிடந் தராதே.
22. பேன்களினாலே பெருஞ்சுரம் பரவும்.
23. பேன்களைக் கொல்லுவதுதான் மதியாகும்.
24. மூட்டுப் பூச்சியால் முடுகும் நளிர்ச்சுரம்.
25. மூட்டைப் பூச்சியை மண்ணெண்ணெயிற் போட்டொழிக்க வேண்டும்.

திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

தென்னிந்தியா வாசக புத்தகங்கள்

				அ.	பை
முதற்	புஸ்தகம்.	முதல்	வகுப்பிற்கு ...	2	6
இரண்டாம்	,,	இரண்டாம்	,, ...	4	0
மூன்றாம்	,,	மூன்றாம்	,, ...	4	
நான்காம்	,,	நான்காம்	,, ...	6	0
ஐந்தாம்	,,	ஐந்தாம்	,, ...	6	0

இந்தத் தென்னிந்தியா வாசகப் புத்தகங்கள் பாலர் வகுப்புத் தொடங்கிப் படிப்படியாக மேலே பல வகுப்புகளுக்கும் பாட புத்தகங்களாக புதிதாய் இயற்றப்பட்டுள்ளன. எலிமெண்டரி பாடசாலை பிள்ளைகளைப்பற்றி அதிக அனுபவமுள்ள உபாத்தியாயர்களால் இவைகள் எழுதப்பட்டன. சிறந்த வித்வான்களால் நன்கு பரிசோதிக்கப்பெற்றன.

பாலநீதிச் செய்யுள் நூற்றிரட்டு.

ஒளவையார் அதிவீரராம பாண்டியன் முதலிய முற்கால வித்துவ சிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதி நூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக்கூடியவாறு தெளிவான எளிய நடையில், மனப்பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந்திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாடசாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்விமான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ் மக்கள் கூடத் தங்கள் முன்னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களாயிருக்கிறார்கள். இது தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக்குறைபாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதிநூல்களை, சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்துகொள்வதற்கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதவுரையுடன் நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களால் அழகாக அச்சிடலாயிற்று. அந்நீதிநூல்களின் பகுப்பும் அடக்கமும் வருமாறு:

	ரு.	அ.	பை.
முதற்படி (ஜூனியர்)			
பகுதி 1. உலகநீதி, ஆத்திசூடி	0	1	6
,, 2. கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ...	0	2	0
,, 3. வாக்குண்டாம், நல்வழி	0	2	0
இடைப்படி. (இண்டர்மீடியேட்)			
பகுதி 1. நீதிவெண்பா	0	2	6
,, 2. நன்னெறி, இனிது 40, இன்னா 40 ...	0	3	0
உயர்படி. (ஸீனியர்)			
பகுதி 1. முதுமொழிக்காஞ்சி, நீதிநெறி விளக்கம்	0	3	6
,, 2. திரிகடுகம், நான்மணிக்கடிகை ...	0	5	0

NATURE READER SECOND BOOK, TAMIL. 3 As.